**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

**மலர்- 5 ✧ இதழ்-11 ✧ ஜூன் 2023**

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்!

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் பாராளுமன்ற வளாகம் புதிதாக அமைத்து திறப்பு விழா நடைபெற்று ஜனநாயகக் குடியரசின் பேராளுமையை வெளிப்படுத்தியிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அடிமைப்பட்டு கிடந்த நம் மக்கள் சுதந்திர வேட்கையில் சொல்லொண்ணா துயரங்களை தாங்கி போராடி பெற்றுத் தந்த சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதில் புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டதும் தலையாய செயல்களில் ஒன்று! வாழ்த்துகிறோம்!

இந்திய குடியரசு தலைவரின்றி திறப்பு விழா நடைபெற்றதும், செங்கோல் பூஜைகளும், ஆதினங்களின் அணிவகுப்பும் கடைகோடியில் வாழும் மாந்தர்கள் கணினிமயமாக்கப்பட்ட உலகில் தொலைக்காட்சி வாயிலாக மூன்றாவது கண் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கவைகளில் ஒன்று! ஜனநாயகத்தின் நான்காவது தூண்கள் நடுநிலையில் நிற்கிறதா என்பதையும் பார்ப்போம்!

மல்யுத்த வீராங்கனைக்கே ஏற்பட்ட நிலை இதுவென்றால் மண்ணை நம்பி உழைத்து வாழும் சாதாரண மனிதனின் நிலை என்னவாகும் என்பதை எண்ணி புலம்புவது மட்டும்தானா நம் செயல் என எண்ணிப் பார்க்க வேண்டும்.

கொடிய கோர விபத்தாக ஒடிசா தொடர் வண்டி விபத்து நடந்திருக்கிறது! காரணம் அறிய ஆயிரம் நடவடிக்கை மேற்கொண்டாலும் அடிபட்ட நேரத்தில் அழுகுரல் அலறலோடு மாய்ந்து போனவர்களை எண்ணி கண்கள் குளமாக அஞ்சலி செலுத்தினோம். காயமடைந்த யாவரும் நல்உடல் நலன் தேறட்டும். நாடு அதற்கு உதவட்டும். குருதிக் கொடை வழங்க குவிந்த அனைவருக்கும் கோடி கைகள் உயர்த்தி வந்தனம்.

கள்ளச் சாராயத்தைக் கட்டுக்குள் கொண்டு வர கவலையோடு அரசு செயல்படுவதை பாராட்டுவோம். காரணமானவர்களை களையெடுக்க வேண்டும். மது ஒழிப்புதான் நிரந்தர தீர்வாக அமையும் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் மக்கள் விரும்புகிறார்கள்.

10000த்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஊதியம் அளிக்க மறுக்கும் ஒப்பந்தத்தில் 16.5.2023 அன்று கையொப்பமிட மறுத்து 19.5.2023ல் தமிழகம் முழுவதும், தொழிலாளர் உரிமையை மறுப்பதுடன் மற்றும் தொழிற்சங்க பாரம்பரிய செயல்பாடுகளை முடக்க எண்ணுவதை எதிர்த்து கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டங்கள் நடத்தினோம்.

தொழிலாளர்கள் மத்தியில் அநீதிக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டோம். தொடர்ந்து மே 27, 28 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற செயற்குழு தீர்மானத்தின்படி ஜூன் 9ல் சென்னை மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு பெருந்திரள் தர்ணா, கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த தொழிலாளர்களால் நடத்தி வெற்றியடைந்திருக்கிறது.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் நேரம் ஒதுக்கி தலைமைச் செயலகத்தில் நம்மிடத்தில் போராட்டத்தின் கோரிக்கைகளை

கேட்டறிந்து பின்னர் மின்சார வாரியத்தில் பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு கொண்டு வர மின்சார வாரியத் தலைவர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து மின்வாரியத் தலைவருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் முடிவுகளான

- ★ 30.05.2023ல் வெளியிடப்பட்ட உத்தரவு (01.12.2015 முதல் 22.02.2018 வரை பணியேற்றவர்களுக்கு வழங்கிய ஊதிய உயர்வை பிடித்தம் செய்யும் உத்தரவு) இன்று அல்லது நாளை திரும்ப பெற்று உத்தரவிடப்படும்.
- ★ 01.12.2019 முதல் 16.05.2023 வரை பணியேற்றவர்களுக்கு அடுத்து வரும் வாரிய கூட்டத்தில் பேசி முடிவெடுத்து ஊதிய உயர்வு பலன்கள் அளிக்கப்படும்.
- ★ கேங்மேன் தொழிலாளர்களின் விருப்ப மாறுதல் உத்தரவு படிப்படியாக விரைந்து அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ★ விடுபட்ட கேங்மேன் பணியமர்த்த அரசுக்கு அனுமதிக்கு சென்ற கோர்ப்பு திரும்பியுள்ளதை வாரிய கூட்டத்தில் பேசி முடிவெடுத்து பணி நியமனம் வழங்கப்படும்.
- ★ K2 அக்ரிமெண்ட் முறையினை கைவிட்டு பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு PWD Schedule of Rate ஊதியம் அளித்து பணியில் தொடர வைப்பதற்கான மாற்று ஏற்பாடு செய்யப்படும்.
- ★ பகுதி நேரப் பணியாளர்கள் அனுமதிக்கப்படாமல் உள்ள சுமார் 1000 அலுவலகங்களுக்கு ஏற்கனவே ஊதியமின்றி பணியாற்றி வருபவர்களை பணி நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ★ கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளர்களாக பதவி மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ★ அரசுக்கு ஒப்புதலுக்கு சென்றிருக்கக் கூடிய கோப்புகளான
  - ● BP2 ரத்து செய்தல்.
  - ● கேங்மேன்களுக்கான விடுப்பு இதர சலுகைகள்
  - ● உள்முகத் தேர்வுக்கான ஒப்புதல்
  - ● JA பதவிக்கு 10ம் வகுப்பு கல்வித் தகுதி.

ஆகியவற்றை அரசுடன் பேசி விரைவில் ஒப்புதல் பெறப்படும்.

- ★ ஊதிய உயர்வில் Pay Matrix கடைசியை அடைந்தவர்களுக்கு நீட்டிப்பு செய்ய அரசாணை எண் 90 நாள் 26.02.2021 மின்சார வாரியத்திற்கு நீட்டிப்பு செய்து ஊதிய உயர்வை PPல் வைப்பது தவிர்க்கப்படும்.
- ★ குடும்ப பாதுகாப்பு நிதி ரூ. 3,00,000/-லிருந்து ரூ. 5,00,000 ஆக அரசாணை எண். 197 நாள்: 01.09.2021ஐ மின்சார வாரியத்திற்கு நீட்டிப்பு செய்யப்படும்.
- ★ காலிப் பணியிடங்களில் நேரடி நியமனம் மூலம் படிப்படியாக நிரப்பிட தொடர் முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஆகியவைகளோடு இதர கோரிக்கைகள் மீது பின்னர் பேசி முடிவெடுப்பது என வாரியத் தலைவர் அவர்களின் உறுதிமொழியினை போராட்டக்களத்தில் தோழர்கள் மத்தியில் அறிவித்து தர்ணா போராட்டம் வெற்றியோடு நிறைவு பெற்றிருக்கிறது.

தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களின் உரிமை மீட்புக்காக, தொழிற்சங்கம், பேச்சுவார்த்தை ஒப்பந்தம் என்கிற மாபெரும் பாரம்பரியத்தை தொடர்ந்திட வைத்திட மின்சார வாரியத்தில் பணியாற்றும் அனைவரும் சமம், ஒரு பகுதியினரை புறக்கணித்து பொதுநலன் பேண முடியாது என்ற கொள்கையை உணர்த்திட, தொழிலுக்கும் தொழிலாளர்களுக்கும் பாலமாக நிற்பதுதான் தொழிற்சங்க செயல்பாடும் போராட்டமும் என்பதை நிரூபித்திடவும் நாம் எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றியடைந்திருக்கிறது! காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை போராட்டக்களத்தில் அமைதி காத்து போராடிய பல்லாயிரக்கணக்கான தோழர்களின் ஒற்றுமையால் அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது! தொடர்ந்து தொழிலாளர் நலனில் அக்கறையோடு தொழிற்சங்க பணியில் முன்னேறுவோம்! ஒரு குடையின் கீழ் தொழிலாளர்களை ஒருங்கிணைக்க உறுதியேற்போம். போராட்டக் களம் கண்ட அனைவருக்கும் இதய பூர்வமான நன்றி.

***– ஆசிரியர்***

நாள் : 09.06.2023

பெறுநர்:

**தலைமைச் செயலாளர்,**
தமிழ்நாடு அரசு தலைமைச்செயலகம்,
சென்னை - 600 009.

ஐயா,

**பொருள் : மின்சாரத் தொழிலாளர்கள் - கோரிக்கைகள் - 09.06.2023 தர்ணா போராட்டம் - தொடர்பாக.**

வணக்கம். ஐயா!

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குள்ள பிரச்சினைகளை தீர்த்திட வேண்டி 09.06.2023 காலை 10.00 மணி முதல் தர்ணாவில் ஈடுபட்டு வரும் நேரத்தில், எங்களது கோரிக்கைகளை கேட்டறிந்திட நேரம் ஒதுக்கி தந்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பாக,

01.12.2015 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையின் முடிவில் 16.05.2023ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தத்தின் முன்னர் 01.12.2019க்கு பின் பணியேற்ற கேங்மேன் 10,000 பணியாளர்கள், வாரிசு வேலைக்கு வந்த சுமார் 2,000 பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு தர முடியாது என்று வாரிய தரப்பில் கூறிவிட்டார்கள்.

மேலும் ஊதிய நிலுவைத் தொகை June 2023, June 2024ல் வழங்கப்படும் என அறிவித்ததை 2023, 2024ல் வழங்கப்படும் என்று மாற்றிவிட்டார்கள்.

மேலும் Class I & II அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு 10 ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும் என முடிவெடுத்துள்ளார்கள்.

கடந்த 30.05.2023ல் வெளியிடப்பட்ட உத்திரவில் 01.12.2015 முதல் 22.02.2018 வரை பணியேற்றவர்களுக்கு வழங்கியிருந்த ஊதிய உயர்வு தொகை திரும்ப ஊதியத்தில் பிடித்தம் செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது.

இதுவரை உள்ள நடைமுறையில் உள்ளவைகளை கடைபிடிக்காமலும் ஒரு தலைபட்சமாக நடைபெறுவதாகவும் உள்ளது.

56,000 காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது. 5,000 கேங்மேன் தேர்வு பெற்றவர்களை பணியமர்த்தவில்லை. 10,000 கேங்மேன் ஊர் மாறுதல் விண்ணப்பம் பரிசீலிக்கப்படாமல் உள்ளது. 1,000 பகுதி நேரப் பணியாளர்கள் நியமனம் செய்யவில்லை, 10,000 ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யவில்லை.

இதுபோன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வில்லாத நிலை உள்ளது.

தலைமைச் செயலாளர் அவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இதர பிரச்சினைகள் முடிவுக்கு கொண்டு வர மின்சார வாரியத்திற்கு தகுந்த உத்திரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# மாநில செயற்குழு சுற்றறிக்கை

நாள்: 30.05.2023

**தோழர்களே! வணக்கம்!**

27.05.2023 மற்றும் 28.05.2023 சனி மற்றும் ஞாயிறு இரு நாட்கள் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழு கூட்டம் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் அஜந்தாவில் மாநிலத் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தலைமையுரையில் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்காக பேச்சுவார்த்தையை தொடங்கிட நாம் எடுத்த முயற்சிகள் குறிப்பாக 2022 ஜுன் 2ம் தேதி வேலை நிறுத்தம் அறிவிப்பும் தொழிலாளர்கள் ஆதரவும்தான் முக்கிய காரணியாக விளங்கியது மட்டுமல்ல தொடர்ச்சியாக நாம் தனித்தும், கூட்டு நடவடிக்கை குழுவுடன் இணைந்தும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளதைக் குறிப்பிட்டு பேசினார்.

குறிப்பிட்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்காமல் இருக்க வாரியம் எடுத்த முடிவை ஏற்காத நாம், ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை என்ற விளக்கத்தினையும் எடுத்துரைத்தார்.

பொதுச்செயலாளர் உரையில் 1.12.2019 முதல் ஊதிய உயர்வு கிடைத்திட வேண்டி நாம எடுத்த தனிப்பட்ட போராட்டங்கள், கூட்டுக் குழுவாக எடுத்த போராட்டங்கள், முயற்சிகள், மின்சார வாரியத்தோடு நடைபெற்ற பேச்சுவார்த்தை குறிப்புகள், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களோடு நடைபெற்ற பேச்சுவார்த்தை நிலவரங்கள், தொடர்ச்சியாக ஒப்பந்தம் ஏ ற்பட்ட முதல் நாள் வரை நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள், இப்படிப்பட்ட காலத்தில் நடைபெற்ற போராட்டம் பேச்சுவார்த்தை குறிப்புகள் யாவற்றையும் குறிப்பிட்டு 90% தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வும் 10% தொழிலாளர்களுக்கு இல்லையென்ற நிலையும் ஏற்க முடியாத நிலை ஏற்பட்டதையும், பொதுவாக Class I to IVல் Class I & II அதிகாரி, Class III & IV தொழிலாளி என்று பிரித்துப் பார்க்கும் போக்கை எதிர்த்தும், ஊதிய உயர்வுக்கு தொடர்பான இதர கோரிக்கைகள் மீது எந்த ஒரு பரிசீலனையும் இல்லாத நிலையில் ஒப்பந்தத்தில் நாம் கையெழுத்திட வில்லை என்பதை விளக்கி பேசினார்.

மாநில பொருளாளர் மற்றும் மாநில அமைப்பு செயலாளர் உரையாற்றிய பின்னர் மாநில செயலாளர் திரு. K. செல்வராஜ் மாநில செயலாளர் அவர்கள் விவாதத்தினை தொடங்கி வைத்தார். செயற்குழு உறுப்பினர்களின் விவாதத்திற்கு பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானங்கள்

1. **1.12.2019 முதல் அளிக்க வேண்டிய ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை முடிவில் 1.12.2019க்கும் ஒப்பந்த தேதி 16.05.2023க்கும் இடைப்பட்டக் காலத்தில் பணியேற்றவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படாது என்பதையும், Class I & IIவில் பணியாற்றுபவர்களுக்கு அடுத்த ஊதிய உயர்வு பத்தாண்டுக்கு ஒரு முறைதான் வழங்க முடியும் என்பதையும், ஊதிய உயர்வுக்கு தொடர்புடைய இதர கோரிக்கைகள் மீது எவ்வித முடிவும் எடுக்காததையும் ஆட்சேபித்து முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் வெளியேறியதை இச்செயற்குழு வரவேற்கிறது.**

2. **மின்விபத்துகளை தவிர்க்கவும், உயிரிழப்புகளை குறைக்கவும் உரிய பாதுகாப்பு வகுப்புகள் நடத்திட வேண்டும் என மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

3. **Gangman பணியாளர்கள் எந்த வேலையை செய்ய வேண்டும் என நிர்வாகம் உத்திரவிடாததால் வாய்மொழி உத்தரவில் மின்சாரம் செல்லும் பகுதிகளில் பணி செய்து உயிர்ச்சேதம் ஏற்படுவதை தவிர்க்க பணி வரைமுறைக் குறித்து மின்சார வாரியம் உத்திரவிட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

4. 33 KV, 110 KV, 230 KV துணை மின் நிலையங்களுக்கு பதவிகள் அனுமதிக்கப்படாமல் உள்ளதை உடனடியாக அனுமதிக்க வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

5. Gangman ஊர் மாறுதல் விண்ணப்பங்களை பரிசீலித்து உடனடியாக ஊர் மாறுதல் உத்திரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

6. தேர்வு செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 5000 Gangman விண்ணப்பதாரர்களை உடனடியாக பணி நியமனம் செய்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

7. வாரிசு வேலை அளிப்பதில் 8ஆம் வகுப்பு கல்வித்தகுதி, 18 வயது பூர்த்தி மற்றும் 3 வருடத்திற்குள் விண்ணப்பிக்கவில்லை என பல காரணங்களை கூறி நிறுத்தி வைத்திருக்கும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து மேற்கண்டவைகளுக்கு விதிவிலக்கு அளித்து அனைவருக்கும் வாரிசு வேலை வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கெேட்டுக் கொள்கிறது.

8. மாதாந்திர ஊதியம், ஓய்வூதியம் மற்றும் பணி ஓய்வு, விருப்பு ஓய்வு ஆகியவைகளுக்கு TANGEDCO, TANTRANSCO என வித்தியாசம் பார்த்து பணப் பயன்கள் TANGEDCOவுக்கு முன்னர் TRANSCOவுக்கு பின்னரும் அளிப்பதை தவிர்த்து TANGEDCO, TANTRANSCO ஆகிய இரண்டிற்கும் ஒரே நேரத்தில் பணபட்டுவாடா செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

9. 10000 Gangman பணியாளர்களை களஉதவியாளர் (Field Assistant) பதவிகளில் பதவி மாற்றம் செய்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

10. வாரிசு வேலைக்கு தேர்வு செய்யப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் கையால் உத்தரவு வழங்குவதற்காக 3 மாதங்களுக்கு மேலும் காலதாமதம் செய்து வருவதை தவிர்த்து உடனுக்குடன் உத்திரவினை வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

11. கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஜுன் 9ம் நாள் சென்னை மின்சார வாரியத் தலைமை அலுவலகம் முன்பு பெருந்திரள் தர்ணா போராட்டம் நடத்திடுவது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### கோரிக்கைகள்

☆ 16.05.2023 முத்தரப்பு ஒப்பந்தபடி 1.12.2019க்கு பிறகு பணியேற்ற 10,000ற்கு மேற்பட்டவர்களுக்கு ஊதிய உயர்வு மறுக்கப்பட்டுள்ளதை உடனே வழங்கிடுக.

☆ 6% ஊதிய உயர்வால் Pay Matrixல் இரண்டு Cellக்கு மிகக் கூடாது என்பதையும், 6% ஊதிய உயர்வால் Pay Matrixல் கடைசி Stageக்கு கூடுதலாக வரும் தொகை Personal Payல் வைத்திட வேண்டும் என்பதையும் திரும்ப பெறுக.

☆ Staff Nurse, Head Draughtsmen, ADM Supervisor, A ADO, ADMO, Sr. ADMO போன்ற பதவிகளுக்கு ஊதியத்திலுள்ள முரண்பாடுகளை உடனடியாக சரி செய்திடுக.

☆ உள்முகத் தேர்வை மீண்டும் அனுமதித்திடுக.

☆ மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி நிலுவைத் தொகையை ஜுன் 2023 மற்றும் ஜுன் 2024ல் வழங்கிடுக.

☆ ஊதிய உயர்வு Pay Matrixல் Last Stage அடைந்தவர்களுக்கு PPல் வைக்காமல் G.O. Ms. No. 90 நாள்: 26.2.2021ஐ மின்சார வாரியத்திற்கும் நீட்டித்து Matrix Cell கூடுதலாக்கி உத்தரவிடுக.

☆ Class I & IIல் பணிபுரிபவர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தப்படி வழங்குவது இதுதான் கடைசி என்பதையும், ஊதிய கமிஷனில்தான் எதிர்காலத்தில் வழங்கப்படும் என்பதையும் திரும்ப பெறுக.

☆ கேங்மேன் ஊர் மாறுதல் மற்றும் விடுபட்ட 5,000 கேங்மேன் பணி நியமனம் உத்திரவுகளை உடனடியாக வழங்கிடுக.

☆ ஒப்பந்த தொழிலாளர்களையும், பகுதி நேர பணியாளர்களையும் பணிநிரந்தரம் செய்திடுக.

☆ காலியாக உள்ள 56,000 பதவிகளில் அடிப்படை பதவிகள் FA, TA, JA, AE, ASSR, TYPIST, ADMAN அனைத்தையும் நிரப்பிடுக.

☆ போராடிப் பெற்ற உரிமைகளைப் பறிக்கும் BP2 நாள் 12.04.2022ஐ ரத்து செய்திடுக.

☆ G.O. Ms No. 197 நாள்: 1.9.2021ஐ மின்சார வாரியத்திற்கு நீட்டித்து உத்தரவு வழங்கி இறப்புக்கான குடும்ப பாதுகாப்பு நிதி ரூ. 3,00,000/-த்திலிருந்து ரூ. 5,00,000/-மாக வழங்கிடுக.

☆ TA Bill (பயணப்பட்டியல்) கொரோனா காலத்தில் வழங்கப்பட்டு வந்த 75% மாற்றி பயண செலவினை 100% அளித்திடுக.

12. BP(2) நாள்: 12.4.2022ஐ ரத்து செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

13. உள்முகத் தேர்வுகளை நிறுத்தி வைத்துள்ளதை கைவிட்டு கல்வித் தகுதியுள்ளவர்களை உள்முகத் தேர்வு மூலம் காலியிடங்களை நிரப்பிட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

14. ஊதிய உயர்வுக்கான நிலுவைத் தொகை 1.4.2022க்கு பிறகு வழங்கப்படுவதில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி ஜூன் 2023 மற்றும் ஜூன் 2024ல் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

15. ஊதிய உயர்வு Pay Matrixல் ஊதிய உயர்வு பயனால் Stage முடிந்தவர்களுக்கு தமிழக அரசின் ஒரு நபர் குழுவின் ஆலோசனைப்படி வெளியிடப்பட்டுள்ள அரசாணை G.O (Ms) No. 90 நாள்: 26.2.2021ன்படி மின்சார வாரியத்திற்கும் ஊதிய விகிதத்தில் Matrix Cell கூடுதலாக்கி உத்தரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

16. அரசுப் பணியாளர் இறப்பு நிதி குடும்ப பாதுகாப்பு நிதி திட்டத்தில் ரூ. 3,00,000யை ரூ. 5,00,000/-ஆக உயர்த்திய G.O (Ms) No. 197ஐ நாள்: 01.09.2021 மின்சார வாரியத்திற்கு நீட்டித்து உத்தரவு வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

17. Covid-19ஐ காரணம் காட்டி பயணப்படி 25% குறைத்து வழங்கியதை மீண்டும் 100% வழங்கிட உத்திரவிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

18. மாநில இணைச் செயலாளர்களாக திருவண்ணாமலை R. சரத்குமாரி, நாகப்பட்டினம் K. புவனேஷ்வரி, திண்டுக்கல் S. பாலசுப்பிரமணியன், சென்னை தெற்கு V. புருஷோத்தமன், கோவை தெற்கு J. கருணா, கோவை வடக்கு P. பிரகாஷ், சிவகங்கை S. செல்லப்பன் மற்றும் கரூர் R. ரவிசந்திரன், ஆகியோர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

செயற்குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும், 2023, ஜூன் 9ஆம் தேதி நடைபெறவுள்ள தர்ணா போராட்டத்தை வெற்றிகரமாக்கிடவும், தேவையான ஆலோசனைகளைத் தெரிவித்த மாநில தலைவர் உரையுடன் செயற்குழு இனிதே நிறைவுற்றது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## நான்மணிக்கடிகை பாடல். 12 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### கந்திற் பிணிப்பர் களிற்றை!

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம் - கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

**சந்தி பிரித்து எழுதிய பாடல்:**

கந்திற் பிணிப்பர் களிற்றை; கதந்தவிர
மந்திரத்தாற் பிணிப்பர் மாநாகம் - கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தை; சான்றோரை
நயத்திற் பிணித்து விடல்.

**கருத்துரை:**

தூண் போன்ற பெரிய தறியில் தொடரி (சங்கிலி) கொண்டு பிணித்து யானையைத் தன்வயப்படுத்திவிடுவார் பாகன்!

சீறுகின்ற நல்ல பாம்பினை அதன் சினம் அடங்கும் வகையில் மந்திரத்தால் கட்டுப்படுத்தித் தன்வயப்படுத்திவிடுவார் மந்திரவாதி! கயமைக் குண்ம படைத்த கீழ்மக்களைக் கோலினால் ஒறுத்து, இரும்புத் தளையிட்டு அடக்கித் தன்வயப்படுத்திடுவார் நாடாளும் மன்னர்! அதுபோல், சான்றோரை இன்சொல் முதலியவற்றால் தன்வயப்படுத்திவிடுவர் அறிவார்ந்த மேன்மக்கள்!

**அருஞ்சொற்பொருள்:**

களிற்றை = யானையை; கந்தின் பிணிப்பர் = குட்டுத் தறியினால் வயப்படுத்துவர் (பாகர்); மா நாக்ம = நல்ல பாம்பை; கதம் தவிர = அதன் சீற்றம் தவிரும்படி; மந்திரத்தால் பிணிப்பர் = மந்திரத்தினால் வயப்படுத்துவர் (மாந்திரீகர்); கயத்தை = கீழ்மகனை; கொந்தி = உடம்பை ஒறுத்து; இரும்பின் பிணிப்பர் = விலங்கினால் வயப்படத்துவர் (அரசர்); சான்றோரை = பெரியோரை; நயத்தின் = இன்சொல் முதலியவற்றால்; பிணித்து விடல் = வயப்படுத்தி விடுக (அறிவுடையோர்).

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
✆ : 9841446621 : 8939152361
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# 1.4.2023 முதல் 4% அகவிலைப்படி உயர்வு

**(சுருக்கம்)**

படிகள் - அகவிலைப்படி - 01.04.2023 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

**(நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 15 நாள்: 29.05.2023**

வைகாசி-15-ம் நாள்,
சோபகிருது வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டது:

1. (நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 01, நாள்: 10.01.2023.
2. அரசாணை (எழுத்துத் தொடர்) எண். 142, நிதி (படிகள்)த் துறை, நாள்: 17.05.2023.

**செயல்முறைகள்:**

பார்வை 1ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணையில் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2023 | அடிப்படை ஊதியத்தில் 8 சதவீதம் |

2. பார்வை 2-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01.04.2023 முதற்கொண்டு மாநில அரசு பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.04.2023 | அடிப்படை ஊதியத்தில் 42 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.04.2023 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும், 01.01.2023 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு 38% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையைப் பின்பற்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அதன் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.04.2023 | அடிப்படை ஊதியத்தில் 42 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.04.2023 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும், 01.01.2023 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு 38% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

4. மேற்கண்ட உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியானது, ஏப்ரல் 2023 மாதத்திலிருந்து கணக்கிடப்பட்டு நிலுவைத் தொகை மே 2023 மாதத்திற்கான ஊதியத்துடன் இணைத்து ஜுன் 2023 மாதம் பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் வழங்கப்படும்.

5. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தனிப்பட்ட ஊதியத்தையும் (Personal Pay) சேர்த்துக் கொள்ள வேண்டும். திருத்தத்தட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அதாவது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

6. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மற்றும் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ. 4100-12500 பெறும் பணியாளர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும்.

**(வாரியத்தின் ஆணைப்படி)**

**ஆ. மணிக்கண்ணன்**
செயலாளர்

## ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 1.4.2023 முதல் 4% அகவிலைப்படி உயர்வு

**(ABSTRACT)**

PENSION - Dearness Allowance to the Pensioners and Family Pensioners - Revised rates of Dearness Allowance from 1st April, 2023 - Adoption of Government Orders - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TANGEDCO Proceedings No. 16,**

**Dated the 29th May, 2023**
Sobakrithu Varudam, Vaigasi-15,
Thiruvalluvar Aandu-2054.

**Read:**

1) (Per) FB TANGEDCO Proceedings No. 2 (SB), dated 10.01.2023
2) G.O.Ms.No. 145, Finance (Pension), Department, dated 17.05.2023.

*****

**PROCEEDINGS:**

In the Proceedings first read above, among other things, orders were issued allowing 38% of Dearness Allowance to the Pensioners/Family Pensioners of Tamil Nadu Generation and Distribution Corporation Limited with effect from 01.01.2023.

2. In the Government Order second read above, orders have been issued revising the rate of Dearness Allowance from 38% to 42%, payable to the Pensioners/Family Pensioners of the Government with effect from 1st April, 2023.

3. It has been decided to extend the same benefit to the Pensioners/Family Pensioners of TANGEDCO, Accordingly, it is hereby ordered that the Pensioners/Family Pensioners of TANGEDCO, be paid Dearness Allowance with effect from 1st April, 2023 at the following rates:-

| **Date from which payable** | **Revised rate of Dearness Allowance** (per month) |
|---|---|
| **1st April, 2023** | **42%** of Basic Pension/Family Pension. |

4. Consequent on increase in the rate of Dearness Allowance from 38% to 42%, the arrears for the month of April 2023, as ordered in Para-3 above, shall be paid to the Pensioners/Family Pensioners along with the pension/family pension from the month of May 2023.

5. The amount of Dearness allowance involving a fraction of a rupee shall be rounded off to the next higher rupee, If such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

6. In the case of divisible Family Pension, the Dearness Allowance shall also be paid proportionately.

**(BY ORDER OF THE BOARD)**

**A. MANIKKANNAN**
Secretary

# 1.12.2019 முதல் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு - உத்தரவு

**(ABSTRACT)**

TANGEDCO - Workmen - Revision of Wages with effect from 1.12.2019 - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TANGEDCO Proceedings No. 13,** **Dated : 24.05.2023.**
Sobakrithu Varudam, Vaigasi-10,
Thiruvalluvar Aandu-2054.

**Read:**

1. (Per) FB TANGEDCO Proceedings No. 9 (SB) dated : 02.03.2018.
2. (Per) CMD TANGEDCO Proceedings No. 224 (SB), dated 07.12.2019.
3. Secretariat Branch Memo. (Per) No. 52295/A16/A161/2019-11, dated 05.01.2023.
4. Secretariat Branch Memo. (Per No. 52295/A16/A161/2019-34, dated : 18.04.2023.
5. From the Chairman, Wage Revision Committee, Letter dated 11.05.2023.
6. Secretariat Branch Letter No. 52295/A16/A161-2019-39, dated 15.05.2023.
7. From the Additional Commission of Labour, O/o. the Commissioner of Labour, Chennai, Letter No. B2/39840/2023, dated 16.5.2023.

*****

**PROCEEDINGS:**

In pursuance of the Memorandum of Settlement, dated 22.02.2018 reached under section 12(3) of the Industrial Disputes Act, 1947 (C.A.XIV of 1947) between the TANGEDCO and its Workmen, orders were issued in the Proceedings first read above revising the pay and also revising other allowances like House Rent Allowance, City Compensatory Allowance, Special Pay and other allowances ets., with effect from 01.12.2015 and 01.10.2017 respectively. The Settlement, dated 22.02.2018 was effective for a period of four years with effect from 01.12.2015.

2. In the Proceedings 2nd read above, the Board constituted a Wage Revision Committee, consisting of certain Directors and Officers of the TANGEDCO/TANTRANSCO to hole negotiations with the Trade Unions for Revision of Pay, Special pay, Allowances including work allocation and staff pattern, Based on the nominations received from the Government to include the representatives of the Finance and Energy Departments, orders were issued in the Memo. 3rd and 4th read above, including the Additional Secretary to Government, Finance Department and Additional Secretary to Government, Energy Department. Consequent on retirement of the Additional Secretary to Government, Energy Department, the Deputy Secretary to Government, Energy Department has been included as Member in the above said Committee.

3. The Wage Revision Committee has held several rounds of negotiations with the Trade Unions. On considering their demands, the said Committee submitted its recommendations with regard to the Revision of Wages with effect from 01.12.2019 to the Chairman-cum-Managing Director, TANGEDCO.

4. The Committee Report has been examined in detail and it has been decided to accept the same. Accordingly, the recommendations have been circulated to the Members of the Board of TANGEDCO and gor their approval. Based on the approval of the Board, a draft Settlement has been prepared and sent to the Commissioner of Labour, Chennai for conducting the conciliation. In her letter 7th read above, the Additional Commissioner of Labour (C), has fixed the concilation talks on 16.5.2023 at 5.00 pm in Auditorium, TANTRANSCO Building, Chennai-2 and requested both parties to attend the concilation talks with relevant records. Accordingly, bothe the parties participated in the concilation talks. After negotiations, a Memorandum of Settlement under section 12(3) of the Industrial Disputes Act, 1947 (C.A.XIV of 1947), agreeing the proposals incorporated in the Settlement on Revision of Wages was signed on 16.05.2023 in between the Management of the TANGEDCO / representatives of the Government and the representatives of the following Trade Unions in the present of the Additional Commissioner of Labour, Office of the Commissionerr of Labour, Chennai:-

1. Tamil Nadu Electricity Worker's Federation.
2. Tamil Nadu Electricity Board Accounts & Executive Staff Union.
3. Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF).
4. Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam.
5. Tamil Nadu National Electricity Workers' Federation (Xavier Group)
6. Tamil Nadu National Electricity Workers' Federation (Swarnaraj Group)
7. Tamil Nadu Electricity Board Engineers' Sangam
8. Tamil Nadu Electricity Employees Congress
9. Tamil Nadu Electricity Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam
10. Bharathiya Electricity Employees Federation
11. Tamil Nadu Electricity Board Card Billig Staff Union.
12. Tamil Nadu Electricity Board Dr. Ambedkar Employees Union.
13. Tamil Nadu Electricity Board Engineers Union.
14. Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam and also other 19 Trade Unions.

5. In pursuance of the Settlement, dated 16.05.2023 referred to in para-4 above, the TANGEDCO, among others passed the following orders:-

**(i) Revision of wages:**

The existing Pay Matrix of the Workmen of TANGEDCO shall be continued as indicated in **ANNEXURE-I** of this order.

**(ii) Dearness Allowance:**

(a) The rate of Dearness Allowance will be as followed in the Government of Tamil Nadu from the to time as was done hitherto.

(b) The existing procedure for sanction of Dearness Allowance shall be continued and the Dearness Allowance on the revised pay for the different periods from 01.12.2019 are as indicated below:-

**(i) Revision of wages:**

| Sl.No. | Date from which payable | Rate of Dearness Allowance (per month) |
|---|---|---|
| 1. | 01.12.2019 to 31.12.2021 | 17% of Basic Pay |
| 2. | 01.01.2022 | 31% of Basic Pay |
| 3. | 01.07.2022 | 34% of Basic Pay |
| 4. | 01.01.2023 | 38% of Basic Pay |

(c) The Dearness Allowance shall be calculated with reference to the Revised Pay granted to the Workmen. Other Special Pay (or) any other emoluments givens as Pay, shall not be taken into account for calculation of Dearness Allowance.

**(iii) House Rent Allowance, City Compensatory Allowance, Special Pay and other Alloances:**

(a) The existing rates of House Rent Allownace, City Compensatory Allowance, Special Pay and other allowances as on 01.10.2017 shall be continued until further orders.

(b) Wherever rent free quarters are provided to the Workmen (or) rent is charged for occupation of quarters provided by the Management, no House Rent Allowance shall be admissible.

**(iv) Personal Pay:**

The personal pay drawn in the existing level of pay in the pay matrix as on 01.12.2019 or on the date of option shall be taken into account for fixing the pay in the revised pay and it will be discontinued after fixing the revised pay. The personal pay arising on or after 01.12.2019 shall be continued to be allowed as per the existing orders in force.

**(v) Selection Grade and Special Grade:**

The existing procedure of allowing two increments for movement to Selection Grade/Special Grade on completion of 9/20 years of service shall be continued.

**(vi) Payment of Arrears:**

(a) The arrears accruing on acccount of Revision of Wages for the period from 01.04.2022 to 31.05.2023 shall be arrived and paid in two equal instalments in the year 2023 and 2024.

(b) In respect of arrears with effect from 01.12.2019 to 31.03.2022, instead of sanctioning the arrears for the above said period, a consolidated lumpsum amount of Rs. 500/- per month for each employee from 01.12.2019 to 31.03.2022 (i.e 28 months) shall be sanctioned and the arrears of this period will also be disbursed to them in two instalments in the year 2023 and 2024.

6. In G.O. (Ms) No. 114, Energy (B2) Department, dated 08.10.2008, Government of Tamil Nadu in principle have accorded approval for the re-organisation of T.N.E.B. by the establishment of a holding company, by the name T.N.E.B. Limited and two subsidiary companies, namely Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) with the stipulation that the aforementioned companies shall be fully owned by Government. Subsequently, TANTRANSCO was incorporated on 15.06.2009 and TANGEDCO and T.N.E.B. Limitd were incorporated on 01.12.2009. Further, the Government of Tamil Nadu have notified the provisional Transfer Scheme, transferring the assets, liabilities and personnel of erst while Tamil Nadu Electricity Board vide G.O. Ms. No. 100, Energy Department dt. 19.10.2010 with the effective date of implementation with effect from 01.11.2010, as per the provisions of the Electricity Act 2003. Accordingly, the erstwhile T.N.E.B. has been re-organised with effect from 1.11.2010 and the successor entities have started furnctioning independently and all personnel of the Board (excluding Chairman and Directors of the Board) were transferred to and absorbed in TANGEDCO on a provisional basis till finalization of Employee Transfer Scheme.

The TANGEDCO hereby makes the following regulations:-

**REGULATIONS**

**SHORT TITLE AND COMMENCEMENT:-**

(1) These Regulations may be called as "the TANGEDCO Revision of Pay (Workmen) Regulations, 2019".

(2) They shall be deemed to have come into force with effect from 1st December, 2019 and with monetary benefit from 01.04.2022.

**2. Definition-** In these Regulations, unless the context otherwise requires:

(i) **"Basic Pay"** means the pay as defined in regulation 10 (19) (1) of the Tamil Nadu Electricity Board Service Regulations drawn in the prescribed Level in the Pay Matrix but does not include any other type of pay like Special Pay as defined in Regulation.

(ii) **"Present emoluments"** shall not include any Special Pay (or) Allowances.

(iii) **"Post"** means any post as specified in Column (2) of Annexure-I.

(iv) **"Pay Structure"** means the pay drawn in the present system level of Pay Matrix applicable to the posat held by the TANGEDCO employees as on the date immediately whether in a substantive (or) officiating capacity.

**Explanation** - The expressing "existing basic pay", in respect of a TANGEDCO employee who on the 1st day of December, 2019 was on deputation (or) on leave (or) on forign service (or) who would have on that date officiated in one (or) more lower posts but for his offciating in a higher post, shall mean such basic pay, Pay level in the Pay Matrix in relation to the post which he would have held but for his being on deputation (or) on leave (or) on foreign service (or) officiating in higher post as the case may be;

(ii) **"Pay Matrix"** means Matrix specified in Appendix, with Levels of pay arranged in vertical cells as assigned to corresponding existing Pay level;

(iii) **"Level"** in the Pay Matrix shall mean the Level corresponding to the existing Pay level in the Appendix.

(iv) **"Pay in the Level"** means pay drawn in the appropriate Cell of the Level a specified in the Pay Matrix;

(v) **"Pay structure"** in relation to a post means the Pay Matrix and the Levels specified therein.

(vi) **"Basic pay in the Revised Pay"** means the pay drawn in the prescribed Level in the Pay Matrix but does not include any other type of pay like Special Pay.

(vii) **"Appendix"** means Appendix annexed to these regulations.

**3. Level of posts:-**

The Level of posts shall be determined in accordance with the various Levels as assigned to the corresponding existing level of pay as specified in the Pay Matrix.

**4. (i) Levels of Pay of Posts:-**

The levels of pay for the existing Pay Matrix as in Col. (4) applicable in respect of such posts against in Col.(2) in Annexure-I.

**(ii) Application of Level of Pay:-**

Save as otherwise provided in these Regulations, there shall be paid to holders of all posts specified in Annexure-I in a substantive (or) in an officiating capacity (or) appointed temporaily under Regulation 106 of the Tamil Nadu Electricity Board Service Regulations (including those on foreign service (or) on leave (or) suspended lien) pay calculated in the levels of pay.

**5. Fixation of Pay in the revised pay:**

The initial pay of a Workman who have opted to be governed by the revised pay from 1st December 2019 shall be fixed separately in respect of his substantive pay in the permanent post on which he holds a lien (or) would have held a lien if he had not been suspended and in respect of his pay in the offiiating post held by him, in the following manner, namely:--

(1) Pay i.e basic pay including personal pay referred to in sub-clause (i) (b) below in the existing pay level of the pay matrix as on 01.12.2019 or on the date of option.

(i) 6% benefit shall be arrived (Pay+Personal pay) as on 01.12.2019 or on the date of option.

(a) After arriving 6%, the revised pay of the employee shall be fitted in the same level of pay in the pay matrix (i.e. not exceeding two cells in the pay matrix).

(b) After arriving 6% of revised pay, if no such cell available due to stagnation in the pay matrix in such case, the difference of amount shall be treated as personal pay.

(ii) After fitment, a Service Weightage of one increment @3% i.e., one cell in the pay matrix shall also be allowed to those who have completed 10 years of regular service as on 1.12.2019/during the period between 01.12.2019 and 16.05.2023 (i.e. the date of settlement) which will count for normal increment, if they opt to come over to the revised pay on the date of completion of 10 years of service during the aboive said period. In such cases, they have to forego the arrears upto the date of option to come over to the revised pay fixation.

(iii) The monetary benefit will take effect from 01.04.2022.

(iv) The arrears accruing on account of Revision of Wages for the period from **01.04.2022 to 31.05.2023** shall be arrived and paid in two equal instalments in the year 2023 and 2024.

(v) In respect of arrears with effect from 01.12.2019 to 31.03.2022, instead of sanctioning the arrears for the above said period, a consolidated lumpsum amount of Rs. 500/- per month for each employee from 01.12.2019 to 31.03.2022 (i.e. 28 months) shall be sanctioned and disbursed to them in two instalments in the year 2023 and 2024.

(vi) In the case of employees absorbed by the TANGEDCO from the Government Departments or other Orgainizations on permanent basis, the regular service in their parent department or organization as the case may be, shall be taken into account for allowing Science Weightage after fixation of pay in the revised pay, if that service counts for increment in their parent department or organization as the case may be.

(vii) The emergency or temporary work charged or contingency service in a time of pay rendered by an employee, if already counted for increment shall be reckoned as regular completed service for the purpose of allowing service weightage. The service rendered by an employee as Trainee or on consolidated pay shall be reckoned as regular completed service for the purpose of allowing service weightage.

(viii) An employee, who has been appointed to the service in the TANGEDCO for the first time after 01.12.2019, is not eligible to get the benefits of Revision of Wages.

(2) If a Workman us promoted to a higherr post temporarily on 01.12.2019 and subsequently reverted to a lower post, his pay shall be fixed in the higher post on 01.12.2019 and subsequently re-fixed in the lower post by allowing Wage Revision benefit.

(3) If a Workman is on leave on 1st December 2019, he shall be entitled to the revised pay from theat date, but the pay so fixed in the revised pay shall be admissible to him only from the date of his retun to duty in the post after the expiry of leave and the period commencing on the 1st December 2019 and ending with the date of such return will count for future increment in the revised pay depending on whether it will count for future increments in the existing pay.

(d) Similarly, where a Workman is on study leave on the first day of December 2019, he shall be entitled to the benefits under these Regulations from 01.12.2019 (or) on the date of option.

(5) A Workman who was on preparatory leave to retirement on 1st December 2019, shall be entitld to choose his pay either in his substantive post (or) in the officiating post in the revised pay for the purpose of computing his gratuity and pension.

(6) (a) If a Workman was under reduction of pay (or) stoppage of increment on the 1st December 2019, his pay shall be fixed on the basis of emoluments he drew on the 1st December 2019 and he shall continue to draw the pay so fixed in the Pay Matrix till the expiry of the period of penalty. His pay shall be refixed immediately following the date of expiry of the period of penalty with reference to the emoluments which he would have drawn on the 1st December, 2019 taking the fact into consideration whether the penalty awarded is without cumulative effect.

(b) If a Workman's increment falling due on the 1st July, 2019 had been postponed for a year as punishment for stoppage of increment without cumulative effect, his actual present emoluments as on the 1st December 2019 would be the basis for determination to revise his pay with effect from the 1st December, 2019 and the pay so fixed shall be in force upto the 30th June 2020. However, for the purpose of determination of his pay with effect from 1st July 2020, his pay on the 1st December 2019 shall be refixed notionally based on the present emoluments which he would have received on the 1st December 2019 but for his penalty and he will get the next increment n the 1st July 2020 from that stage. However, the penalty of stoppage of increment due on the 1st July 2019 had been awarded with cumulative effect, the revised pay shall be fixed based on the actual present emoluments as on the 1st December 2019. There shall be no re-fixation of pay in this case.

(7) If a Workman is under suspension on the 1st December 2019 (or) if he was discharged from service (or) reverted from a post before that date and is re-appointed to that post after that date, he shall be entitled to the revised pay only from the date on which he returns to duty in the post (or) from the date of his re-appointment to that post.

(8) A Workman who was promoted between 01.12.2019 and 16.05.2023 (or) promoted prior to 01.12.2019, and opted for fixation of pay on the date of his next increment falling subsequent to 01.12.2019. shall be permitted to revise his earlier option for fixation of pay in the promoted post, within a period of three months from the date of fixation of pay in the revised pay.

**6. Rectification of pay Anomaly of junior getting more pay than senior:-**

(1) Wherein the fixation of apy in the revised pay in a post (or) promotion to a higher post, pay of a Workman gets fixed higher than the senior to him, who have been promoted earlier to the same higher post in the same cadre, the pay of such senior Workman shall be stepped up to the same cell as that of his junior in that higher post and such stepping up shall be done with effect from the date of promotion of the junior employee subject to the fulfillment of the following conditions namely:-

(a) Both the junior and the senior Workmen shall belong to the same cadre and the posts in which they have been promoted are idential in the same cadre.

(b) The existing pay and the revised pay structure of the lower and higher posts in which they are entitled to draw pay are identical;

(c) The senior Workman at the time of promotion shall have drawn equal or more pay than the junior.

(d) The anomaly shall have arisen directly as a result of the application of the provisions of Tamil Nadu Electricity Board Service Regulations or any other rule or order regulating pay fixation on such promotion in the revised pay.

Provided that where the pay of the junior Workman is higher than that of the senior on account of any advance increments granted to him, the provisions of this sub regulation shall not be invoked to step up the pay of the senior Workman.

(2) The order relating to re-fixation of the pay of the senior Workman in accordance with sub regulation (1) shall be issued under the provisions of Tamil Nadu Electricity Board Service Regulations and the senior Workman shall be entitled to the next increment on completion of the required qualifying service of one year with effect from the date of re-fixation of pay.

(3) If a Workman draws his next increment in the revised pay and becomes eligible for higher pay than His senior whose next increment falls due on later date, then the pay of such senior shall be re-fixed equal to the pay of the junior from the date on which the junior becomes entitled to higher pay, subject to satisfaction of usual conditions for rectification of Pay Anomaly and also subject to the condition that both the senior and junior should (or) should not have drawn service weightage.

**NOTE :** In case where the pay of Workman is stepped up in terms of above regulations, the next increment shll be granted after completion of requisite qualifying service of one year.

**7. Annual Increments :-**

(i) Consequent on the revision of pay with effect from 1.12.2019, the date of next annual increment shall not be changed.

(ii) In the case of a Workman who reaches the maximum of the level of pay, increments beyond the maximum of pay shall be allowed at the rate of 3% and the amount so arrived shall be treated as personal pay.

(iii) In the case of Workmen who have opted to remain in the existing pay until the date of movement to Selection Grade, the next increment after fixation shall be granted in the revised pay on the normal date in which he would have drawn the increment had he continued in the existing pay.

**8. Option:-**

(1) A Workman may exercise option for fixation of pay to remain in the existing pay until any of the following dates falling between 1.12.2019 and 16.05.2023 (i.e. Settlement date):-

(i) to remain in the existing pay until the date on which he earns his next (or) any subsequent increments in the existing pay;

(ii) on the date of promotion (or) on the date of accrual of increment in the lower post;

(iii) on the date of movement to Selection Grade / Special Grade.

(iv) on the date of completion of 10 years of service between 01.12.2019 and 16.05.2023 (i.e. Settlement date)

